தினமணி

## மூலனூரில் முருங்கைப் பவுடர் தொழிற்சாலை அமையுமா?

First Published : 17 Aug 2010 02:31:55 AM IST



மகாராஷ்டிர மாநிலத்துக்கு அனுப்புவதற்காக முருங்கை காய்களை மூட்டைகளில் அடுக்குகின்றனர் விவசாயிகள்.

தாராபுரம்: நிலையற்ற விலை, பூச்சித் தாக்குதல் காரணமாக தாராபுரம், மூலனூர் பகுதிகளில் முருங்கை சாகுபடி குறைந்து வருகிறது. இதைத் தடுக்க மூலனூரில் முருங்கைப் பவுடர் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென விவசாயிகள் பல ஆண்டுகளாகப் போராடி வருகின்றனர்.

4 வகை முருங்கை: தமிழகத்தில் விளையும் முருங்கைகளில் கொடி முருங்கை, செடி முருங்கை, மர முருங்கை, செம் முருங்கை என 4 வகைகள் உள்ளன. கொடிக்கால் பகுதிகளில் சாகுபடி செய்வது கொடி முருங்கை. தமிழகத்தின் தென் பகுதிகளில் விளைவது செம் முருங்கை. செடி முருங்கை, மர முருங்கை போன்றவை தாராபுரம் மற்றும் மூலனூர் பகுதிகளில் சாகுபடி செய்யப்படுகிறது.

இனிப்பு கலந்த சுவை: இப்பகுதி மண்வளம், முருங்கை வளர்ப்பதற்கு உகந்ததாக உள்ளது. இதனால் இங்கு விளையும் காய்கள் குட்டையாகவும், இனிப்பு கலந்த சுவையுடனும் இருக்கும். இவை அதிக சத்துள்ளதாக இருப்பதால் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வர்த்தகர்கள் தாராபுரம், மூலனூர் சந்தைக்கு வந்து கொள்முதல் செய்து வந்தனர். உற்பத்தி குறைந்தது: கிளாங்குண்டல், இடைக்கல்பாடி, எரிசனம்பாளையம், குமாரபாளையம், சூரம்பாடி உள்ளிட்ட 100-க்கும் மேற்பட்ட கிராமங்களில் 10 ஆயிரத்துக்கும் அதிகமான ஏக்கர்களில் முருங்கை சாகுபடி செய்யப்படுகிறது.

இந்நிலையில், முருங்கை விலையில் நிலையற்ற தன்மை உள்ளதாலும், நோய்த் தாக்குதலாலும் உற்பத்தி குறைந்தது. இதனால் முருங்கை சாகுபடியை நம்பியிருந்த விவசாயிகள், மாற்றுப் பயிருக்கு மாறி வருகின்றனர்.

வர்த்தகர்கள் வருவதில்லை: மூலனூர் முருங்கையின் ருசியை விரும்பிய பெங்களூரு, மைசூரு, விஜயவாடா பகுதி வர்த்தகர்கள் இதன் விதையை தங்கள் பகுதியிலேயே பயிரிட்டனர். இதையடுத்து போதிய முருங்கை கிடைத்ததாலும், தமிழ்நாட்டுக்கு வந்து செல்லும் செலவு மிச்சமானதாலும் இப்பகுதிக்கு வர்த்தகர்கள் வருவதை அடியோடு நிறுத்தி விட்டனர்.

நோய் தாக்குதல் அதிகம்: கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்க திருப்பூர் மாவட்டத் தலைவர் ஏ.காளிமுத்து கூறியது: மூலனூர் மற்றும் தாராபுரம் சந்தையில் இருந்து வாரந்தோறும் 30 முதல் 40 லோடு முருங்கை வரை வெளிமாநிலங்களுக்கு அனுப்பப்பட்டு வந்தது. தற்போது 3 முதல் 4 லோடு வரை மட்டுமே அனுப்பப்படுகிறது. உற்பத்தி அதிகமாக இருக்கும்போது கிலோ முருங்கை | 7-க்கும், உற்பத்தி குறையும்போது கிலோ | 30-க்கும் விற்கப்படும்.

தற்போது சாகுபடியும் குறைந்து, வரத்தும் குறைந்ததால் கிலோ முருங்கை | 5-க்குத் தான் விற்கப்படுகிறது. பருவமழை தவறிப் பெய்தாலோ, பனி அதிகம் கொட்டினாலோ முருங்கைப்புழு தாக்குகிறது. இதைத் தடுப்பதற்கான மருந்து விலை அதிகம் என்பதால், நடுத்தர விவசாயிகளால் வாங்க முடிவதில்லை.

**மருத்துவ குணம்:** மூலனூர் முருங்கையைக் காயவைத்து, பொடி செய்தால் மருத்துவ குணமுள்ளதாக மாறும். எனவே, முருங்கை அதிகம் சாகுபடி செய்யப்படும் மூலனூர் பகுதியில் முருங்கைப் பவுடர் தொழிற்சாலை அமைப்பதன் மூலம் விவசாயிகள் பயன்பெறுவதோடு, பல்லாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும் என்றார்.

**வேளாண் கருவிகள் வாடகைக்கு வழங்கும் திட்டம் விரிவாக்கம்**

First Published : 17 Aug 2010 09:04:34 AM IST

காஞ்சிபுரம், ஆக. 16: நவீன விவசாய கருவிகளை கூட்டுறவு வங்கிகள் மூலம் வாங்கி அவற்றை விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் அளிக்கும் நடவடிக்கை விரிவுபடுத்தப்பட்டு வருகிறது என்று காஞ்சிபுரம் சரக துணைப் பதிவாளர் கி.ஞானசேகரன் தெரிவித்தார்.

காஞ்சிபுரம் மாவட்டம் கொளப்பாக்கம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் உறுப்பினர் கல்வித் திட்ட முகாமும், சங்க உறுப்பினர்களுக்கு கடன் வழங்கும் நிகழ்ச்சியும் அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் சர துணைப் பதிவாளர் கி.ஞானசேகரன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று பேசியது:

கூட்டுறவு சங்கங்கள் தற்போது லாபம் ஈட்டத் தொடங்கியுள்ளன. பொது சேவை மையங்கள், விவசாய சேவை மையங்கள், வேளாண் மருந்தகம் அமைத்தல் போன்ற பல்வேறு பணிகளை செய்து வருகின்றன.

நவீன விவசாய கருவிகளை கூட்டுறவு சங்கங்களே வாங்கி, விவசாயிகளுக்கு குறைந்த வாடகைக்கு அளித்து வருகின்றன. இதுதவிர உறுப்பினர்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு பல்வேறு வகையான கடன் உதவிகளை கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கி வருகின்றன. வணிக வங்கிக்கு இணையாக கிராம அளவில் கூட்டுறவுச் சங்கங்கள் பொதுமக்களுக்கு சேவை செய்து வருகின்றன என்றார்.

இந் நிகழ்ச்சியில் வீட்டு வசதிக் கடன், சுழல்நிதிக் கடன், பயிர்க் கடன் உள்பட ரூ.7 லட்சம் அளவுக்கு கடனுதவி வழங்கப்பட்டது. காஞ்சிபுரம் மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் தனி அலுவலர் கு.சேகர் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

**மயிலாடுதுறையில் 45 மி.மீ. மழை**

First Published : 16 Aug 2010 11:39:41 AM IST

மயிலாடுதுறை, ஆக. 15: நாகை மாவட்டம், மயிலாடுதுறை, குத்தாலம் ஆகிய பகுதிகளில் கடந்த 2 நாள்களாக தொடர் மழை பெய்து வருகிறது. இதில் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் 45 மி.மீ. மழை பதிவானது.

மயிலாடுதுறை மற்றும் சுற்றுப் பகுதியில் பெய்த மழை அளவு (மில்லிமீட்டரில்):

மயிலாடுதுறை-45, அணைக்கரை-145, கல்லணை-75.2, திருக்காட்டுப்பள்ளி-47.6, தஞ்சாவூர்-35, கும்பகோணம்-8, மஞ்சளாறு-31.

மயிலாடுதுறை, குத்தாலம் பகுதிகளில் கடந்த சில தினங்களாக மழை பெய்து வருவதால் விளைநிலங்களில் முன்பட்ட சாகுபடி செய்யப்பட்டு, அறுவடைக்கு தயார் நிலையில் உள்ள குறுவை நெல் பயிர்கள் வயல்களில் சாய்ந்து விழும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் அச்சத்தில் உள்ளனர்.

**தலையங்கம்: நெல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்...**

First Published : 17 Aug 2010 12:00:00 AM IST

Last Updated : 17 Aug 2010 12:46:14 AM IST

சிறு,குறு விவசாயிகளின் பம்புசெட்டுகளில் உள்ள பழைய மின்மோட்டார்களை நீக்கிவிட்டு அரசின் சார்பில் புதிய மின்மோட்டார்கள் இலவசமாகப் பொருத்தித் தரப்படும் என்பதும், பெரு விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் புதிய பம்புசெட்டுகள் பொருத்தித் தரப்படும் என்பதும் தமிழக முதல்வரின் விடுதலை நாள் விழா அறிவிப்பு.

திறன் இல்லாத பழைய மோட்டார்களைப் பயன்படுத்துவதால், விவசாயத்துக்கான மின்சாரத்தில் 20 விழுக்காடு வீணாகிறது, இத்தகைய புதிய, தரமான மின்மோட்டார்களை இலவசமாகப் பொருத்தித் தருவதால் (இலவசமாக வழங்குவது மட்டுமல்ல, கிணற்றில் பொருத்தித் தருவதும்கூட இலவசம்தான்) இந்த மின்இழப்பைத் தவிர்த்துவிடலாம் என்பது முதல்வர் இதற்குக் கூறியிருக்கும் காரணம்.

தமிழ்நாட்டில் ஏறக்குறைய 19 லட்சம் விவசாயிகள் தங்கள் கிணறுகளுக்கு மின்இணைப்புப் பெற்றுள்ளனர். இவர்களில் 15 லட்சம் பேர் சிறு, குறு விவசாயிகள். ஆக இப்போது முதல்வரின் அறிவிப்பின்படி 15 லட்சம் விவசாயிகளுக்கு மின்மோட்டார்கள் புதுப்பிக்கப்பட வேண்டும். அத்துடன் 4 லட்சம் விவசாயிகளுக்கு 50 விழுக்காடு மானியத்தில் பொருத்தித் தர வேண்டும். அதாவது மொத்தம் 19 லட்சம் மின்மோட்டர்களுக்கான செலவினத்தை தமிழக அரசு ஏற்றாக வேண்டும். ஒரு மின்மோட்டார் குறைந்தது | 40 ஆயிரம் ஆகும். இந்தக் கணக்கின்படி இத்திட்டத்தின் மொத்த நிதித்தேவை ஏறக்குறைய | 6,800 கோடி.

இந்தத் திட்டத்தை இத்தனை செலவில் அமல்படுத்தி, அனைத்து மின்மோட்டார்களையும் இலவசமாக மாற்றிப் பொருத்தினால், முதல்வர் கூறுவதைப்போல 20 விழுக்காடு வீணாகும் மின்சாரம் மிச்சப்படுத்தப்படுமா என்றால், அதுவும்கூட மிகப் பெரிய கேள்வியாகத்தான் இருக்கும். மத்திய மின்சார ஒழுங்காற்று ஆணையம் இலவச மின்சாரம் கூடாது என்று சொல்லி வந்தபோதிலும், பொதுவாக ஆண்டுக்கு | 3,000 கோடி என்று மின்வாரியத்துக்கு அரசு ஒரு தொகையை மானியமாக வழங்கும் போதும், ஒவ்வொரு பம்புசெட்டில் உள்ள மீட்டரையும் ரீடிங் எடுத்து, அதன்படி உள்ள கட்டணத்தை வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது அந்த ஆணையம். ஆனால் தமிழக அரசோ, இலவசம் என்றான பின்பு எவ்வளவு மீட்டர் ரீடிங் இருந்தால் என்ன என்று சொல்வதோடு, ஆணையம் எதற்காக இதனை வலியுறுத்துகிறது என்கிற சிந்தனைக்கே திரும்பவில்லை. மின்வாரிய ஊழியர்கள் வயலுக்குப் போய், பம்புசெட்டுகளில் ரீடிங் எடுக்கும் வழக்கமே மறைந்தொழிந்துவிட்டது.

மத்திய மின்சார ஒழுங்காற்று ஆணையம், இலவச மின்சாரத்தையும் ரீடிங் செய்து கொடுக்க வேண்டும் என்கிற நடைமுறையானது, தமிழ்ப் பழமொழி சொல்வதைப்போல, "ஆற்றில் போட்டாலும் அளந்து போடு' என்பதைத் தவிர வேறில்லை.

ஒரு பம்புசெட்டில் எவ்வளவு மின்சாரம் பயன்பட்டிருக்கிறது என்பதை வைத்து, அந்த நிலத்தில் நடைபெற்ற விவசாயத்தின் வீச்சு, விளைச்சல் எல்லாவற்றையும் தோராயமாகக் கணக்கிட முடியும். மேலும், இந்த மின்சாரம் அந்த நிலத்தின் அளவுக்குத் தகுந்தபடிதான் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதைக் கணிப்பதன் மூலம், அவர்கள் தவறாக மின்சாரத்தைப் பயன்படுத்தியிருந்தால் அதனைக் கண்டுபிடிக்கும் வாய்ப்புகளும்கூட உண்டாகும். மேலும், ஒவ்வோராண்டும் இந்த மின்சாரப் பயன்பாட்டில் கூடுதல் குறைதல் இருக்கிறதா என்பதைக்

கொண்டு, விவசாயத்தில் ஏற்பட்டுள்ள நல்லது கெட்டதுமான மாற்றங்களை அறிந்துகொள்ள முடியும். ஆனால் இவை எதற்கும் செவிசாய்க்க மறுத்துவிட்டது தமிழக அரசு.

இதனால், பம்புசெட் மின்சாரம் பல நேரங்களில் பண்ணை வீடுகளுக்கும் போகிறது. சில இடங்களில் கரும்பு பிழிவதற்கும் போகிறது. சில நேரங்களில் வெறுமனே லாரிகளில் தண்ணீர் நிரப்பவும் பயன்படுகிறது. வணிக ரீதியில் இவ்வாறு இலவச மின்சாரம் தவறாகப் பயன்படுத்தப்படுவது பல இடங்களில் நடந்துகொண்டே இருக்கிறது. சில நேரங்களில் அரசியல் தலைவர்களை வரவேற்க சாலைகளில் பல கிலோ மீட்டர் தொலைவுக்குப் போடப்படும் குழல்விளக்குகளுக்கும்கூட, கட்சி பேதமின்றி, சாலையோரம் இருக்கும் பம்புசெட்டுகளிலிருந்து இலவசமாக மின்சாரத்தை இழுத்துக் கொள்கிறார்கள்.

நிலைமை இப்படி இருக்க, தற்போது தரமான புதிய மின்மோட்டார்களை மாற்றிக் கொடுத்தால் அதனைப் பயன்படுத்தும் நேரம் அதிகரிப்பதுடன், மின்சாரத்தின் அளவும் அதிகரிக்குமே தவிர, குறையாது. அதாவது போக்குவரத்து நெரிசலைக் குறைக்க நாற்கர சாலைகள் அமைத்தால் வேகம் அதிகரித்து வாகனப் போக்குவரத்தும் அதிகரித்து விபத்துகளும் அதிகரிப்பதைப் போலத்தான் இதுவும். நல்ல மின்மோட்டார்களை நன்றாகப் பயன்படுத்தி, நிறைய மின்சாரத்தை உறிஞ்சுவார்கள். வீணடிப்பார்கள், வேறென்ன?

கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக அண்மையில் விவசாயிகளுக்கு மானியம் அளிக்கப்பட்டது. அதேபோன்று மின்மோட்டார்களின் தரம் உயர்த்த மானியம் அளிக்கப்படுவது என அரசு முடிவு செய்திருந்தால் அதனைப் பாராட்டியிருக்கலாம்.

ஒரு டன் கரும்புக்கு மேலும் | 500 அதிகரிக்கப்படும் என்றாலோ அல்லது நெல்லுக்கு விலை | 500 அதிகம் என்றாலோ விவசாயிக்கு நன்மை கிடைக்கும். விவசாயத்துக்கு ஊக்கம் அளித்ததாகவும் அமையும்.

விதை நெல்லுக்கு மானியம் இல்லை என்று சொல்லும் அரசு, மின்மோட்டாரை இலவசமாக வழங்குவதால், மின்மோட்டார் உற்பத்தியில் ஈடுபடும் ஒரு சில நிறுவனங்கள் இதற்கான அனைத்து ஆர்டர்களையும் பெற்று வளம்பெறப் போகின்றன.

மக்கள் பணத்தை முறைப்படி செலவிடுவதில் தவறில்லை. காமன்வெல்த் போட்டிகள் தொடங்கி சாதாரண விவசாய மின்மோட்டார் வரை, திட்டங்கள் உண்மையான நோக்கத்தைத் தாண்டி, வீணாகின்றன என்பதும், யாரோ சிலர் அதனால் சில ஆயிரம் கோடி ரூபாய் பார்க்கிறார்கள் என்பதும் தான் நமது ஆதங்கம்.

"வயலுக்கு இரைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்' என்பது புரிகிறது. ஆனால் புல்லுக்கு மட்டுமே வாய்க்கால் நீர் ஓடி, நெல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் என்றால்...

தினமலர்

**போலி உர மூட்டைகள் விற்பனை செய்தால் நடவடிக்கை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 17,2010,01:14 IST

கள்ளக்குறிச்சி: விழுப்புரம் மாவட்டத் தில் போலி உர மூட்டைகள் விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக் கப்படும் என வேளாண் இணை இயக்குனர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.விழுப்புரம் மாவட்டத் தில் உள்ள உரக்கடைகளில் சில குறிப்பிட்ட யூரியாவில் கருப்பு கலர் சாயத்தை கலந்து டி.ஏ.பி என்றும், பயோ-டி.ஏ.பி என்றும் விற்பதாக தகவல் பெறப்பட்டுள்ளது.எனவே விவசாயிகள் உர மூட்டைகளில் உரிய உரங்கள் தயாரிப்பு நிறுவனங்களின் உர சத்துக்கள், விற்பனை விலை விவரங்கள் அச்சிடப் பட்டுள் ளதா என பார்த்து விற் பனை விலையை சரிபார்த்து வாங்க வேண்டும். அவ்வாறு அச்சிடப்படாமல் இருந்தால் உடனடியாக விழுப்புரம் வேளாண் இணை இயக்குனர் அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்கலாம்.மேலும் விவசாயிகளை ஏமாற்றி போலியாக பயோ டி.ஏ.பி, பயோ உரம், ஆர்கானிக் பூஸ்ட் போன்ற பெயர்களில் போலியாக விற்பனை செய்யும் உர விற்பனை நிலையங்கள் மீது உரக்கட்டுபாடு சட்டத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) அரங்கநாதன் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகள் குறை கேட்பு கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 17,2010,01:03 IST

கடலூர்: மாவட்ட விவசாயிகள் குறை கேட்புக் கூட்டம் வரும் 20ம் தேதி கடலூரில் நடக்கிறது.கடலூர் மாவட்ட விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் வளர்ச்சி மன்றக் கூடத்தில் வரும் 20ம் தேதி நடக்கிறது. கூட்டத்தில் விவசாயிகள் தங் களது வேளாண்மை சார்ந்த குறைகளைக் கோரிக் கைகளாக வைக்க அனைவருக்கும் வாய்ப்பு வழங்கப்படும். எழுத்து பூர்வமாகவும், தங்களது கோரிக்கைகளை மனுவாகவும் வழங்கலாம்.இக் குறைகளுக்கு சம்பந்தப்பட்ட துறையின் உயர் அலுவலர்களின் உரிய பதில் அளிக்கவும், தொடர் நடவடிக்கைகளும் எடுக்க கலெக்டரால் அறிவுறுத்தப்படவுள்ளது. இவ் வாய்ப்பை கடலூர் மாவட்ட விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஆக., 20ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 17,2010,02:57 IST

தஞ்சாவூர்: தஞ்சை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆகஸ்ட் 20ம் தேதி காலை 10.30 மணிக்கு கலெக்டர் அலுவலக பிரதான கட்டிட கூட்ட அரங்கில் கலெக்டர் சண்முகம் தலைமையில் நடக்கிறது.முன்னோடி விவசாயிகள், விவசாய சங்கத்தினர் பங்கேற்று விவசாயம், நீர்ப்பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம், வேளாண் பொறியியல் துறை, நுகர்பொருள் வாணிபக்கழகம், தோட்டக்கலைத்துறை போன்ற விவசாயம் தொடர்புடைய கருத்துக்களை மட்டும் தெரிவிக்கும்படி கலெக்டர் சண்முகம் கேட்டுக் கொண்டார்.

**வறட்சியிலும் விவசாயிகளை வாழ வைக்கும் சீனியவரை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 17,2010,04:18 IST

நரிக்குடி,: நரிக்குடி பகுதியில் மைலி, மிதலைக்குளம், எம்.புளியங்குளம், கோரைக்குளம், மேலேந்தல், விடத்தகுளம், நல்லதரை உள்பட பல்வேறு கிராமங்களில் தற்போது மழையில்லாத நிலையில் சீனியவரை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதற்கு மிகக் குறைந்த அளவு தண்ணீரே போதும்.சீனியவரை வளர்ச்சிக் காலம் வைகாசி, ஆனி, ஆடி ஆகிய மூன்று மாதங்கள் மட்டுமே. ஒரு ஏக்கருக்கு மூன்று கிலோ விதை தேவைப்படுகிறது. ஏக்கருக்கு அரை முதல் இரண்டு குவிண்டால் வரை விதைகள் கிடைக்கும். கோவில்பட்டியிலிருந்து தனியார் நிறுவனத்தினர், நரிக்குடி பகுதி விவசாயிகளிடம் 10 கிலோ சீனியவரை விதைகளை கொடுக்கின்றனர். விவசாயிகள் இவற்றை விதைத்து அறுவடை செய்து மீண்டும் சீனியவரையை காய வைத்து விதைகளை தனியார் நிறுவனமிடமே திருப்பி வழங்குகின்றனர்.அவர்கள் தாங்கள் கொடுத்த பத்து கிலோ விதையை எடுத்துக் கொண்டு, மீதி விதைக்கு குவிண்டாலுக்கு 5000 ரூபாய் வரை தருகின்றனர். மேலேந்தலைச் சேர்ந்த மச்சக்காளை கூறியதாவது: தண்ணீர் இல்லாத நிலையில் பம்ப்செட் வைத்துள்ளவர்கள் மட்டுமே இந்த சீசனில் கடந்த 2 ஆண்டுகளாக சீனியவரை சாகுபடி செய்து வருகிறோம். வேறு விவசாயம் இல்லாத நிலையில் சீனியவரை விதை மூலம் ஓரளவு வருமானம் கிடைக்கிறது, என்றார்.

**மழையில்லாததால் மரங்களை வெட்டி சாய்க்கும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 17,2010,04:00 IST

திண்டுக்கல்: திண்டுக்கல்லைச் சுற்றியுள்ள கிராமங்களில் மழையில்லாததால் தென்னை விளைச்சல் பாதிக்கப்பட்டு மரங்களை வெட்டி அழிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.திண்டுக்கல் மாவட்டத் தில் கடந்த சில மாதங் களாக மழையில்லை.குடிநீர் தட்டுப்பாடு பொதுமக்களை பாதித்துள்ளது. மற்றொருபுறம் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். திண்டுக்கல்லை சுற்றியுள்ள கிராமங்களில் தென் னை மரங்களில் காய்ப் பில்லை. மரங்களை விவசாயிகள் வெட்டி அப்புறப்படுத்துகின்றனர். செட்டிநாயக்கன்பட்டி பகுதியை சேர்ந்த விவசாயிகள் தங்கள் நிலத்தில் இருந்த தென்னை மரங் களை வெட்டி இங்குள்ள கண்மாயில் போட்டுள்ளனர்.ஊராட்சி தலைவர் செல்வகணேசன் கூறுகையில்,"மழை குறைவால் தென்னை மரங்கள் பட்டுப் போக துவங்கியுள்ளன. விவசாயிகள் அவற்றை வெட்டி அழிக்க ÷ வண் டிய பரிதாப நிலை ஏற் பட்டுள்ளது. கண்மாயில் போடப்பட்டுள்ள இவற் றை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்,' என்றார்.

**அரசு மானியங்களை விவசாயிகள் பயன்படுத்த அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 17,2010,04:11 IST

மதுரை,: ""அரசு மானியங்களை விவசாயிகள் அறிந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும்,'' என மதுரை கலெக்டர் காமராஜ் பேசினார்.மதுரை கிழக்கு யூனியன் வட்டாரத்தில் வேளாண்மை துறை, கால்நடை துறை ஆகியவை சார்பில், விவசாயிகள் பயிற்சி முகாம் நடந்தது. உதவி இயக்குனர் எஸ்.கனகராஜ் வரவேற்றார். இணைஇயக்குனர் சங்கரலிங்கம், விவசாய கல்லூரி முதல்வர் வைரவன், கால்நடை துறை இணை இயக்குனர் காஜாமொகைதீன் பங்கேற்றனர். பயிற்சியை துவக்கி வைத்து கலெக்டர் சி.காமராஜ் பேசியதாவது: விவசாயத் துறையில் புதிய தொழில்நுட்பங்களை கடைபிடித்து, அதிக மகசூல் பெறுவோருக்கு 4 ஆயிரம் ரூபாய் பரிசு வழங்கப்படுகிறது. இதுவரை சிறந்த விவசாயிகள் 32 பேருக்கு பரிசு வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 15 ஆயிரத்து 12 எக்டேரில் செம்மை நெல் சாகுபடி நடந்தது. இந்த ஆண்டு 26 ஆயிரம் எக்டேரில் நடவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இம்முறையில் எக்டேருக்கு ஒன்றரை டன் அதிகமாக மகசூல் பெறலாம்.பயறு உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பான தொழில்நுட்பங்களை விவசாயிகள் அறிய வேண்டும். உயிர் உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள், தெளிப் பான்கள் மானிய விலையில் வழங்கப்படுவது குறித்து அறிய

வேண்டும். கால்நடை துறை மூலம் கோ3 தீவனப் புல் வளர்ப்பு, யூரியா மூலம் செறிவூட்டப்பட்ட வைக்கோல் தயாரிப்பு போன்றவை செயல் விளக்கம் மூலம் காட்டப்படுகின்றன. இவ்வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும். திறன் குறைந்த பழைய மோட்டார் பம்பு செட்டை மாற்றி, புதிய பம்பு செட்டை பொருத்த 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. அரசின் மானிய திட்டத்தின் கீழ், மதுரை மாவட்டத்திற்கு 23.80 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது, என்றார்.

**கிராமிய கண்டுபிடிப்புகளுக்கு நபார்டு வங்கி நிதியுதவி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 17,2010,04:16 IST

மதுரை: "" கிராமிய கண்டுபிடிப்புகளுக்கு நபார்டு வங்கி நிதியுதவி செய்கிறது, "என, நபார்டு வங்கி உதவிப் பொது மேலாளர் சங்கரநாராயணன் தெரிவித்தார்.மதுரையில் கந்தராஜ் என்பவர் கண்டுபிடித்த, கரும்பு அறுவடை செய்யும் இயந்திரத்துக்கு நிதியுதவி வழங்கி அவர் கூறியதாவது :கிராமப்புறங்களில் விவசாயம் சார்ந்த கருவிகளை கண்டறிந்தால், நபார்டு வங்கி நிதியுதவி செய்கிறது. அந்த கண்டுபிடிப்பை அறிவியல் ரீதியாக சோதனை செய்திருக்க வேண்டும். நடைமுறை பயன்பாட்டில் செயல்படும் வகையில், கருவி இருந்தால், அவற்றை மேலும் வடிவமைக்க, நிதியுதவி வழங்கப்படும். இந்த நிதியின் மூலம் கருவியின் செயல்பாட்டை மேம்படுத்தலாம்.

மேலும் கருவிகளுக்கான "பேட்டர்ன்' வாங்குவதற்கும், தொடர்ந்து சந்தை படுத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்படும், என்றார்.கண்டுபிடிப்பாளர் கந்தராஜ் கூறியதாவது : நான் ஐந்தாவது வரை படித்துள்ளேன். எனது வயலில் விளைந்த கரும்புகளை வெட்ட, கூலி அதிகம் கேட்டதால், புதிய இயந்திரத்தை கண்டுபிடிக்க திட்டமிட்டேன். ஒற்றை சக்கரம் பொருத்திய இயந்திரத்தின் மூலம் ஒரு மணி நேரத்தில் இரண்டு டன் கரும்புகளை வெட்டமுடிந்தது. தற்போது கூடுதலாக ஐந்து இயந்திரங்கள் தயாரிக்க, நபார்டு வங்கி நிதியுதவி வழங்கியுள்ளது. சிறு, குறு விவசாயிகளுக்கு இந்த கருவி பயனுள்ளதாக இருக்கும். சக்கரத்துக்கு பதிலாக களைவெட்டும் கருவி, வரப்பை சீரமைக்கும் கருவியை பொருத்திக் கொள்ளும் வகையில், புதிதாக வடிவமைத்துள்ளேன், என்றார்.

## பாலக்காட்டில் யானை கூட்டத்தால் பயிர்கள் சேதம்: பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.8 லட்சம் நிதி ஒதுக்கீடு

பாலக்காடு,ஆக.17–

பாலக்காடு மாவட்டத்தில் யானைகளின் அட்டகாசத்தால் விவசாய பயிர்கள் சேதம் அடைந்து உள்ளன. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.8 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து அரசு உத்தரவிட்டு உள்ளது.

யானைகள் அட்டகாசம்

பாலக்காடு மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக காட்டில் இருந்து ஊருக்குள் யானைக்கூட்டம் புகுந்து விடுகின்றன. குறிப்பாக இந்த யானைகள் கஞ்சிக்கோடு, மலம்புழா, வாளையாறு, ஒலவக்கோடு பகுதியில் உள்ள கிராம பகுதிக்குள் அடிக்கடி புகுந்து விவசாய பயிர்களை சேதப்படுத்தி வருகின்றன.

யானைகளின் அட்டகாசத்தால் வாழை, தென்னை, கம்பு, நெல், கரும்பு, காய்கறி தோட்டங்கள் சேதம் அடைந்தன. இதனால் விவசாயிகள் பலர் நஷ்டம் அடைந்தனர். பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவரும் ஒன்று திரண்டு பாலக்காடு வனத்துறை அலுவலகம் முன் தர்ணா போராட்டம் நடத்தினார்கள். யானைகளின் அட்டகாசத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

ரூ.8 லட்சம் நிதி ஒதுக்கீடு

இதை தொடர்ந்து வனத்துறை அதிகாரிகள் காட்டு யானைகள் ஊருக்குள் வராமல் இருக்க கும்கி யானைகள் மூலம் காட்டு யானைகளை விரட்ட திட்டம் தீட்டினார்கள். அதன்படி பரம்பிக்குளம் பகுதியில் இருந்து கும்கி யானைகள் வரவழைக்கப்பட்டு யானைகள் வரும் பகுதியில் ரோந்து செல்லப்பட்டது.

தற்போது கேரளாவில் ஓணம் பண்டிகை வர இருப்பதால் யானைகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்க அரசு ரூ.8 லட்சம் நிதி ஒதுக்கியது. இந்த தொகையில் வாளையாறு, ஒலவக்கோடு வனக்கோட்ட பகுதிக்கு உட்பட்ட மலம்புழா, புதுச்சேரி, புதுபரியாரம் பகுதியை சேர்ந்த 66 விவசாயிகளுக்கு 7.06 லட்சம் நஷ்ட ஈட்டை வனத்துறை அதிகாரிகள் வழங்கி உள்ளார்கள். இந்த தகவலை இரு கோட்ட வன அதிகாரிகளும் தெரிவித்தனர்.

**சென்ற ஜூலை மாதத்தில் நாட்டின் பணவீக்கம் 9.97%–ஆக குறைந்தது**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி

நாட்டின் பணவீக்க விகிதம், சென்ற ஜூலை மாதத்தில் 9.97 சதவீதமாக குறைந்துள்ளது. இது, சென்ற ஜூன் மாதத்தில் 10.55 சதவீதமாக அதிகரித்திருந்தது.

நடப்பு ஆண்டில், ஜூன் மாதம் வரையிலான நான்கு மாதங்களில், பணவீக்க விகிதம் 10 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்தது. சென்ற மே மாதத்தில், தற்காலிக புள்ளி விகிதத்தின்படி பணவீக்க விகிதம் 10.16 சதவீதமாக இருந்தது. இது, மறு மதிப்பீட்டில் 11.14 சதவீதமாக அதிகரித்துள்ளது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட மாதத்தில், வெங்காயம், சமையல் எண்ணெய் போன்றவற்றின் விலை மிகவும் குறைந்திருந்தது. குறிப்பாக, சென்ற ஆண்டு ஜூலை மாதத்தை விட, நடப்பு ஆண்டு ஜூலை மாதத்தில், வெங்காயத்தின் விலை 6.85 சதவீதமும், சமையல் எண்ணெய் விலை 0.34 சதவீதமும் குறைந்தது. காய்கறிகள் விலை மொத்தத்தில் 14 சதவீதம் சரிவடைந்தது, இதில் உருளைக்கிழங்கின் விலை 44 சதவீதமும் குறைந்திருந்தது.

உணவு சாராத பிரிவின் கீழ் சிமெண்டு விலை 8.36 சதவீதமும், உலோகம் அல்லாத தாதுக்களின் விலை 4.81 சதவீதமும் குறைந்திருந்தன.

இவ்வாண்டு ஜூன் மாதம் 25–ந் தேதி, மத்திய அரசு பெட்ரோலிய பொருள்களின் விலையை உயர்த்தியது. இதன் தாக்கம், சென்ற ஜூலை மாத எரிபொருள்களுக்கான குறியீட்டில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஜூலை மாதத்தில், எரிபொருள்களுக்கான குறியீட்டு விகிதம் 3.2

சதவீதம் அதிகரித்திருந்தது. இருப்பினும், குறிப்பிட்ட தானியங்கள், உற்பத்தி பொருள்கள் போன்றவற்றின் விலை குறைந்திருந்தது.

**வேளாண் பல்கலைக்கழகத்தில் உணவு பொருள் தயாரிப்பு பயிற்சி**

கோவை, ஆக.17–

கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் லெண்டில் பருப்பில் இருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப் பொருள் தயாரிப்பு குறித்த ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் வருகிற 23–ந் தேதி நடக்கிறது.

லெண்டில் பருப்பு என்பது நாம் சமையலுக்கு உபயோகப்படுத்தும் துவரம் பருப்பு போன்ற ஒரு வகை பருப்பாகும். இந்த பருப்பு கனடா, துருக்கி மற்றும் வட இந்தியாவில் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் அதிகஅளவு புரதச்சத்து, நார்ச்சத்து, கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு, வைட்டமின்–பி மற்றும் தாது உப்புகள் அடங்கி உள்ளன. கொழுப்பு மற்றும் சோடியம் மிக குறைந்த அளவே உள்ளது. செலினியம் அதிக அளவு உள்ளதால் குழந்தைகளின் அறிவுத்திறனை வளர்க்க உதவுவதாக ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. இத்தகைய சத்து நிறைந்த லெண்டில் பருப்பை வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்ள அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையத்தில் பல வகையான பாரம்பரிய உணவுப்பொருட்கள் தயார் செய்யும் முறைகள் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன. இதற்கான பயிற்சி வருகிற 23–ந் தேதி நடக்கிறது. பயிற்சியில் பருப்பு அரவை செய்வோர், வியாபாரிகள், சிறுதொழில் முனைவோர் உள்பட பலர் கலந்து கொண்டு பயிற்சி பெற உள்ளனர்.

மேலும் இந்த பயிற்சி பற்றி அறிய விருப்பம் உள்ளவர்கள் பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண் பல்கலைக்கழகம், கோவை என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

இந்த தகவலை வேளாண் பல்கலைக்கழக மக்கள் தொடர்பு ரவிக்குமார் தியோடர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

**பந்தலூரில், சிறு விவசாயிகள் கண்டன பேரணி– ஆர்ப்பாட்டம்**

பந்தலூர், ஆக.17–

பந்தலூரில் சிறு விவ சாயிகள் சார்பில் நேற்று கண்டன பேரணி மற்றும் ஆர்ப்பாட்டம் நடந்தது.

சிறு விவசாயிகள் கூட்டம்

பந்தலூர் கூட்டுறவு தொழிற் சாலை உறுப்பினர்கள், கடந்த ஜூலை மாதம் பச்சை தேயிலை ஒரு கிலோவுக்கு ரூ.9.59 கொடுக்க வேண்டியதை 2 ரூபாய் 7 பைசா பிடித்தம் செய்து 7 ரூபாய் 50 பைசா வழங்கியதற்கு கண்டனம் தெரிவித்து இருந்தனர்.

மேலும் ஜூலை மாத விலையை மறுநிர்ணயம் செய்து பிடித்த பணத்தை திருப்பி தர

வேண்டும், உறுப்பினர்கள் வினியோகம் செய்யும் தரமான பச்சை தேயிலையை தூளாக உற்பத்தி செய்ய தேயிலை தூள் தயாரிப்பாளரை உடனடியாக நியமிக்க வேண்டும். நிரந்தர தனி அலுவலர் நியமனம் செய்ய வேண்டும்.

உற்பத்தி செலவு

ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படும் ஊழியர்களை இந்த தொழிற்சாலையில் பணியில் அமர்த்த கூடாது. உறுப் பினர் களின் பச்சை தேயிலையை முழுமையாக கொள்முதல் செய்யும் வகையில் தொழிற் திறனை அதிகரித்து நவீன படுத்த வேண்டும். தேயிலை தூள் உற்பத்தி செலவு சில தொழிற்சாலைகளில் 10 ரூபாய் குறைவாக உள்ள போது இந்த கூட்டுறவு தொழிற்சாலையில் மட்டும் 21 ரூபாய் 43 பைசா செலவு ஆகிறது. இதனை குறைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்,

மகா சபையை கூட்ட வேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கை களை வலியுறுத்தி கண்டன பேரணி– ஆர்ப்பாட்டம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

கண்டன பேரணி– ஆர்ப்பாட்டம்

இதன்படி நேற்று பந்தலூரில் சிறு விவசாயிகள் கண்டன பேரணி மற்றும் ஆர்ப்பாட் டம் நடத்தினார்கள். பேரணி பந்தலூர் மார்க்கெட்டில் தொடங்கி, முக்கிய வீதிகள் வழியாக சென்று கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையை வந்தடைந்தது. அங்கு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடந்தது.

இதற்கு போராட்டக்குழு ஒருங்கிணைப்பாளர் மத்தாய் தலைமை தாங்கினார். இணை ஒருங்கிணைப்பாளர் விஜயக் குமார் வரவேற்று பேசினார். இதில் விவசாயிகள் தொழிலா ளர்கள் முன்னேற்ற சங்க நிர்வாகி செல்வராஜ் மற்றும் தாமஸ், சண்முகம், வேலாயுதம், அப்துல்ரகுமான், ஆறுமுகம் உள்பட ஏராளமான விவசாயி கள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தின் போது, கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட் டன. தொடர்ந்து அங்கு பொதுக் கூட்டம் நடந்தது. பொதுக் கூட்டத்தில் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் தொடர் போராட்டம் நடத்தப்படும் என்று சிறு விவசாயிகள் தெரிவித்தனர்.

சிறு விவசாயிகளுக்கு இலவச மின் மோட்டார்கள்: கருணாநிதி அறிவிப்பு



சென்னை, ஆக. 16-

தொழில் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற உதவும் வகையில், இந்த ஆண்டில் 1 லட்சம் இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும் என்றும், சிறு, குறு விவசாயிகளின் பம்பு செட்டுகளில் பழைய மின் மோட்டார்களை நீக்கி விட்டு இலவசமாக புதிய மின் மோட்டார்கள் பொருத்தி தரப்படும் என்றும் முதல்-அமைச்சர் கருணாநிதி அறிவித்து உள்ளார்.

இந்தியாவின் 64-வது சுதந்திர தின விழா நேற்று நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. சென்னை புனித ஜார்ஜ் கோட்டை கொத்தளத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் முதல்-அமைச்சர் கருணாநிதி தேசிய கொடியை ஏற்றி வைத்து உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:-

இன்று நம் இந்தியத் திருநாட்டின் 64-வது சுதந்திரத் திருநாள். நமது சுதந்திரத்தை நிலைநாட்டிட; தமது இன்னுயிரை ஈந்த மாவீரர்கள் அனைவருக்கும் தமிழக மக்கள் சார்பில் நன்றிப் பெருக்குடன், வீரவணக்கம் செலுத்துகிறேன். சுதந்திரத் திருநாளில் மாநில முதல்-அமைச்சர்கள் கொடியேற்றி வைத்திடும் உரிமையை 1974-ம் ஆண்டு தமிழகத்தின் சார்பில் நான் வலியுறுத்தியபோது, அதை வழங்கிய அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்கு இதய நன்றியை வழங்கி பெருமிதம் கொள்கின்றேன்.

சுதந்திரம் என்பது தேசியக் கொடியை ஏற்றி வைப்பதற்கு மட்டும் பயன்படுவதல்ல! நமது நாட்டு மக்கள் நல்வாழ்வு - நலவாழ்வு - வள வாழ்வு பெறத்தக்க திட்டங்களைத் தீட்டி-அவற்றை முறையாகச் செயல்படுத்தி - அரசியல் - கல்வி -சமூக - சமதர்ம - பொருளாதார நிலைகளில் உயர்ந்து - எல்லோருக்கும் எல்லாப் பயனும் கிடைக்கத்தக்க வகையில் விழிப்போடும், விரைவோடும், கனிவோடும், கடமை உணர்வோடும் செயல்பட வேண்டியது - சுதந்திர நாட்டு

அரசின் தலையாய கடமையாகும். இந்த உணர்வோடு 2006 சட்டப்பேரவை தேர்தலுக்குப் பின் ஐந்தாவது முறை, தமிழக முதல்-அமைச்சராகப் பொறுப்பேற்ற நான், அந்த விழா மேடையிலேயே தேர்தல் அறிக்கையில் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தொடங்கினேன். 4 ஆண்டுகள் முடிவடைந்து, 5-வது ஆண்டு ஆட்சி நடைபெறும் இந்த வேளையில், இது வரை ஆற்றிய பணிகளில் சிலவற்றை மாத்திரம் சுட்டிக்காட்டிட விரும்புகிறேன்.

1 ரூபாய்க்கு 1 கிலோ அரிசி வழங்கும் திட்டம்; குறைந்த விலையில் பாமாயில், துவரம் பருப்பு, முதலிய பொருள்கள்; மானிய விலையில் 25 ரூபாய்க்கு 10 மளிகைச் சாமான்கள்; என்ற இத்திட்டங்களின் மூலம் தமிழகத்தில் அனைத்துத் தரப்பினருக்கும் உணவுப் பாதுகாப்பு உன்னதமான வகையில் உறுதி செய்யப்பட்டிருக்கிறது என்று உச்ச நீதி மன்றம் கூறியிருப்பதைச் சுட்டிக்காட்டி ஏடுகள் பாராட்டியிருக்கின்றன.

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத வகையில்; பட்டதாரிகளே இல்லாத குடும்பங்களிலிருந்து தொழிற்பட்டப் படிப்புகளில் இந்த ஆண்டு சேர்ந்துள்ள முதல் தலைமுறையைச் சேர்ந்த ஏறத்தாழ 70 ஆயிரம் இளைஞர்களுக்கு முதல்முறையாகக் கல்விக் கட்டணம் ரத்து; பள்ளிக் கல்வித் துறைக்கு தமிழக வரலாற்றிலேயே முதல்முறையாக இந்த ஆண்டு 10 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு! அரசின் சார்பில் புதிதாக 5 அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக் கழகங்கள்; 6 மருத்துவக் கல்லூரிகள், 11 பொறியியல் கல்லூரிகள், 14 கலை அறிவியல் கல்லூரிகள் என உயர்கல்விக்கான வாய்ப்புகள் பெருமளவுக்கு உருவாக்கப்பட்டுள்ளன.

கோவையில் 2010 ஜூன் மாதம் 23 முதல் 27-ந் தேதி வரை 5 நாட்களுக்கு தமிழக அரசின் சார்பில் மிகுந்த எழுச்சியோடும் ஏற்றத்தோடும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்தப்பட்டது. அதில் ஆயிரக்கணக்கான ஆய்வறிஞர்களும், லட்சோப லட்சம் தமிழ் மக்களும் கலந்து கொண்டு, தமிழ் மொழியின் ஆக்கத்துக்கும், மேம்பாட்டுக்கும் தேவையான பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டன. அதுபோலவே, உலகப் புகழ் குவித்துள்ள மாமன்னர் ராஜராஜனின் தஞ்சை பெரிய கோவில் கட்டி முடிக்கப்பட்ட ஆயிரம் ஆண்டு நிறைவு விழாவினை செப்டம்பர் 25, 26-ந் தேதிகளில் மிகச் சிறப்புடன் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இஸ்லாமியர்க்கு 3.5 சதவீத இடஒதுக்கீடு; அருந்ததியர்க்கு 3 சதவீத உள் ஒதுக்கீடு வழங்கப்பட்டு, நலிந்த சமுதாயங்களைச் சேர்ந்த அவர்கள் உயர்கல்வியிலும், வேலை வாய்ப்புகளிலும் முன்னேற்றம் அடைந்து வருகின்றனர். இதுவரை, அரசுத் துறைகளில் 4 லட்சத்து 65 ஆயிரம் இளைஞர்கள் நிரந்தர வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.
வருமுன் காப்போம் திட்டம்; இளம் சிறார் இருதயப் பாதுகாப்புத்திட்டம்; பள்ளிச்சிறார் இருதயப் பாதுகாப்புத்திட்டம்; பள்ளிச்சிறார் கண்ணொளித் திட்டம்; அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களும் 24 மணி நேரமும் இயங்கும் திட்டம்; அவசரகால மருத்துவ ஊர்தி 108 சேவைத் திட்டம்; அரசு ஊழியர்க்கான புதிய காப்பீட்டு திட்டம்; உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்; போன்ற பல்வேறு மருத்துவ திட்டங்கள்

நடைமுறைப்படுத்தப்பட்டு, லட்சக்கணக்கான ஏழை எளியோர் தரமான மருத்துவ வசதிகளை இலவசமாகப் பெற்று வருவதால், பொது சுகாதாரம் பேணுவதில் தமிழகம் முன்னணி மாநிலமென அனைவராலும் பாராட்டப்பட்டு வருகிறது.

ஏழை எளியோர், நோய்வாய்ப்பட்டோர், அனாதைகள் ஆகியோர் மீது அன்பும் பரிவும் கொண்டு அவர்களைப் பராமரிப்பதையே தமது வாழ்க்கை லட்சியமாகக் கொண்டு வாழ்ந்து, நோபல் பரிசு பெற்ற - மறைந்த அன்னை தெரசா பிறந்த நூற்றாண்டு 2010 ஆகஸ்ட் 26 அன்று தொடங்குவதையொட்டி தமிழக அரசின் சார்பில் அவரது நினைவைப் போற்றும் வகையில் சிறப்பாக அதனைக் கொண்டாடுவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் தேவைப்படும் இடங்களிலெல்லாம் பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மக்களுக்கு குடிநீர் வசதிகள் மேம்படுத்தப்படுகின்றன. கழக அரசு பொறுப்பேற்ற பிறகு ராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தை 630 கோடி ரூபாய்ச் செலவில் நிறைவேற்றி முடித்திருக்கிறோம். தற்போது ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் 1,929 கோடி ரூபாய்ச் செலவில் வேகமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் வேலூர் கூட்டுக் குடிநீர் திட்டம் விரைவில் நிறைவேற்றப்படவுள்ளது.
இவைகளைத் தொடர்ந்து 1,712 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மதுரை, கோவை, நாகை, விருதுநகர், சிவகங்கை, திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் ஐந்து கூட்டுக் குடிநீர் திட்டங்களையும், ஒரு குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தையும் நிறைவேற்றுவதற்கு நிர்வாக ஒப்புதலும் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழகமெங்கும் புதிய புதிய கட்டிடங்கள் - சாலைகள் - பாலங்கள் - மேம்பாலங்கள் எனப் பல்வேறு வகையிலும் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன; குறிப்பாக சென்னை மாநகரில் 14,600 கோடி ரூபாய் செலவில் "மெட்ரோ-ரெயில்" திட்டம் வேகமாக நடைபெற்று வருகிறது.

ஏழை எளியோர் பயன்பெறுகின்ற மத்திய அரசின் திட்டமான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தைத் தமிழக அரசு மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி, இந்தியாவின் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. அதனால், தமிழகம் உச்சநீதிமன்றத்தின் பாராட்டுகளைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட 80 ரூபாய் தினக்கூலி, இந்த அரசு மேற்கொண்ட சீரிய முயற்சிகளின் பயனாக, 1.1.2010 முதல் 100 ரூபாயாக உயர்த்தி வழங்கிட, மத்திய அரசு முன்வந்துள்ளது என்பதையும் சுட்டிக்காட்டுவதோடு - அதற்காக மத்திய அரசுக்கு நன்றியும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவைபோன்ற பல்வேறு திட்டங்களின் வரிசையில் மேலும் ஒரு சில புதிய திட்டங்களைத் தொடங்குவது குறித்து, இந்தச் சுதந்திர தின விழாவில் குறிப்பிட விரும்புகிறேன்.
குடிசை வீடுகளே தமிழகத்தில் இல்லை எனும் புதிய வரலாற்றைப் படைப்பதற்காக தமிழகத்தின் ஊராட்சிப் பகுதிகளிலுள்ள 21 லட்சம் குடிசை வீடுகளையும், தமிழ்நாடு அரசின் முழு நிதியுதவியுடன், 6 ஆண்டுகளில் கான்கிரீட் வீடுகளாக மாற்றும் "கலைஞர் வீடு வழங்கும் திட்டம்" எனும் புதிய - புரட்சிகரமான திட்டம் இந்த ஆண்டு தொடங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், முதல் கட்டமாக நடப்பாண்டில் 3 லட்சம் குடிசைகளுக்குப் பதில், புதிய கான்கிரீட் வீடுகளைக்

கட்டுவதற்காக, வீடு ஒன்றுக்கு 60 ஆயிரம் ரூபாய் வீதம், 1800 கோடி ரூபாயை தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. அதன்படி தெரிவு செய்யப்பட்டுள்ள 3 லட்சம் பயனாளிகளுக்கும் இன்று முதல் கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்கான "பணி ஆணைகள்" வழங்கப்படுகின்றன. இந்த திட்டத்தின் கீழ் கட்டப்படும் ஒவ்வொரு கான்கிரீட் வீட்டிற்காகவும் அரசின் சார்பில் 60 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுமென்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளபோதிலும்; திருச்சி மாநகரில் நடைபெற்ற இதற்கான தொடக்க விழாவின் போது என்னிடம் தெரிவிக்கப்பட்ட கோரிக்கையினையேற்று, மேலும் 15 ஆயிரம் ரூபாய் கூடுதலாக்கி, ஒவ்வொரு வீட்டிற்கும் 75 ஆயிரம் ரூபாய் வீதம் மானியமாக வழங்கிட இந்த அரசு முடிவு செய்துள்ளது என்ற மகிழ்ச்சிகரமான அறிவிப்பையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓட்டைக் குடிசையிலே - ஒன்றரைச் சாண் பாயிலே - கொட்டும் மழையிலும், கொளுத்தும் வெயிலிலும் - வாடிக்கிடந்த மக்களுக்கு வாழ்வில் விடிவளிக்கும் இத்திட்டத்தை இன்று தொடங்கி வைப்பதில் உள்ளம் எல்லாம் இன்ப வெள்ளம் நிறைந்தது போன்ற உணர்வைப் பெறுகிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒருவர் வீதம், இங்கு வந்துள்ள 31 பேருக்கு, இன்று பணி ஆணைகள் வழங்கப்பட்டு; இந்த மகத்தான வீடு வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்படுகிறது என்ற செய்தியை தெரிவிப்பதில் நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன்.

எந்த மாநில அரசும் இதுவரை மேற்கொள்ளாத மிகப்பெரிய திட்டமாக - அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது.
இத்திட்டத்தின்கீழ், கடந்த 4 ஆண்டுகளில் 10 ஆயிரத்து 104 கிராம ஊராட்சிகளில், 2 ஆயிரத்து 41 கோடி ரூபாய்ச் செலவில், அனைத்து அடிப்படை வசதிகளும் உருவாக்கப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் அமைப்பு இந்த ஆண்டினை "உலக இளைஞர்கள் ஆண்டு" என அறிவித்திருப்பதையொட்டி; வேலைவாய்ப்பில்லாத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெறுவதற்கேற்ற பயிற்சிகளைத் தீவிரப்படுத்தும் நோக்கத்துடன், புதிய திட்டம் ஒன்றும் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு படித்த இளைஞர்கள்-பொறியியல், இளங்கலை முதுகலைப் பட்டம் பெற்றுள்ள இளைஞர்கள் ஆகியோருக்கு வேலை வாய்ப்புக்கான திறன்வளர்ப்புப் பயிற்சி இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும். பயிற்சி பெற்ற இளைஞர்கள் பல்வேறு தொழில் நிறுவனங்களில் உரிய வேலை வாய்ப்புகளைப் பெற இத்திட்டம் வழிவகுக்கும். நடப்பு ஆண்டில் ஒரு லட்சம் இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரவிருக்கும் இத்திட்டத்தைச் செயல்படுத்த முதற் கட்டமாக 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்வதற்கான அரசு ஆணை இந்நன்னாளில் வெளியிடப்படுகிறது.

தமிழகத்தில் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில், கடந்த நான்காண்டுகளில் மட்டும் 3 ஆயிரத்து 465 கோடி ரூபாய் மதிப்பிலான சாலைப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும் சாலைகளை நேர்த்தியான முறையில் சீரமைத்திட, இந்த ஆண்டில் சிறப்பு நிதியாக 1000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகம் முழுவதிலும் பயன்படுத்தப்பட்டுவரும் பல விவசாய பம்பு செட்டுகள், திறன் குறைந்தவையாக இருப்பதால், மின்சாரம் அதிகம் செலவாகிறது. இதுவும் மின் பற்றாக்குறைக்கு ஓரளவு காரணமாகும். இத்தகைய பம்பு செட்டுகளுக்கு பதில், திறன்மிக்க புதிய பம்பு செட்டுகளைப் பொருத்துவதன் மூலம், 20 சதவீத அளவுக்கு மின்சாரத்தைச் சேமித்திட முடியும். சிறு, குறு விவசாயிகளின் பம்பு செட்டுகளில் உள்ள பழைய மின் மோட்டார்களை நீக்கிவிட்டு, அவற்றிற்குப் பதிலாக, புதிய மின் மோட்டார்கள் அரசின் சார்பாக இலவசமாகப் பொருத்தித் தரப்படும். மற்ற விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்துடன், புதிய மோட்டார்கள் பொருத்தித் தரப்படும்.

இப்படி தமிழகம் வளம்பெற்று - மக்களின் வாழ்க்கைத் தரம் உயர - ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் மெய்வருத்தம் பாராமல் - கண் துஞ்சாமல் - பசிநோக்காமல் - சிலரால் அள்ளி வீசப்படும் அவதூறுக் கணைகளை அலட்சியப்படுத்தி; ஆக்கப்பூர்வமான பணிகளால், நமது தாய்த் தமிழகத்தின் புகழ் தரணியெங்கும் பரவி நிலைபெற வேண்டும் எனும் ஒரே நோக்கத்துடன்; "காலம் பொன் போன்றது; கடமை கண் போன்றது" எனும் முதுமொழிக்கொப்ப, ஒவ்வொரு நொடியும் தமிழக மக்களுக்குப் பயன் தரவேண்டும் எனும் எண்ணத்தோடு உழைத்துவரும் நிலையில்; உங்கள் அனைவருக்கும் மீண்டும் எனது சுதந்திர தின நல்வாழ்த்துகளை தெரிவித்து விடைபெறுகிறேன்.
இவ்வாறு முதல்-அமைச்சர் கருணாநிதி பேசினார்.

நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வுப் பணிகளுக்காக சிறப்பாக பணியாற்றிய தேனி மாவட்ட கலெக்டர் முத்துவீரன், தருமபுரி மாவட்ட கலெக்டர் அமுதா, கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் சண்முகம் ஆகியோருக்கு, முதல்-அமைச்சர் கருணாநிதி விருதுகளை அறிவித்தார். பின்னர் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியில் அவர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்படும்.